# என் சின்ன மலருக்கு ஒரு சிறிய மடல்

## A LITTLE LOVE NOTE FOR MY LITTLE FLOWER



என் சின்ன தேவதை நீ...
கடவுள் எனக்கு கொடுத்த விலை மதிக்க முடியாத பொக்கிஷம் நீ...
என் எண்ண ஓட்டங்களின் பிரதிபலிப்பாக நீ...
உன் செல்ல சிலுங்கல்களினால் என்னை ஆட்கொண்டவள் நீ...
நீ வளைய வரும் போது ஒலிக்கும் கால் சலங்கை ஒலியால்,
என் வாழ்கையை இனிமை படுத்தியவள் நீ...
'அம்மா' என்று நீ அழைத்த முதல் முறை,
என் தாய் மொழியும் இவ்வளவு அழகா என்று
என்னை ஆச்சிரியத்தில் ஆழ்தியவள் நீ...
நான் பொய் கோபம் காட்டி பேசாமல் போனாலும் உன் புன் சிரிப்பை காட்டி
என்னை மயங்கச் செய்தவள் நீ...
யார் மனதையும் புண் படுத்த விரும்பாத மென்மையான மலர் நீ...
சிறு சிறு உயிர்களிடத்திலும் அன்பு பாராட்டி
அதன் மூலம் மகிழ்ச்சியை எனக்கு கற்று தந்த ஆசான் நீ...
பசுமை புரட்சியை பற்றி உனக்கு தெரிந்ததை வாய் ஓயாமல் பேசும் பச்சை கிளி நீ...

உன் அழகிய மென் கரத்தால் அமுது சமைத்து பரிமாறி நாங்கள் ரசித்து
உண்பதை ரசனையுடன் ரசித்தவள் நீ...
உன் மனம் வாடி என் மடி சாயும் பொழுது,
உன் தலை கோதி தூங்க செய்வதில் லயித்தவள் நீ...
என் விரல் பிடித்து நடை பயின்ற நாட்களை மறக்காமல், என்
சுமைதாங்கியாக எனை தாங்கி நடப்பவள் நீ...
இனிமையான குரலினால் எனை ஈர்த்து, அந்த இசையின் மூலமாக
என்னை ஆனந்தத்தில் மூழ்கடித்தவள் நீ...
அனைவரிடமும் அன்பாக பழகும் இனிய தோழி நீ...
என் மனதை கவர்ந்த அழகான சின்ன சிநேகிதி நீ...

GAYATHRI RAMESH
GRD IYERS